2015 செப்டம்பர் 28]

### (இ) குளச்சல் தொகுதி, ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏ.வி.எம்., கால்வாய் சகதி நிறைந்து, சாக்கடை போல் காணப்படுவதால் சுகாதாரக் கேடு மற்றும் துர்நாற்றம் உள்ளது. அந்தப் பகுதி மீனவ மக்கள், இஸ்லாமிய மக்கள் மற்றும் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, சகதி போல் உள்ள சாக்கடையைச் சுத்தம் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்— *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவில்லை என்ற தவறான கருத்தைப் பதிவுசெய்து, வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள். அது தவறு. முறைப்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் துறை வாரியாக வந்த பதிலை இங்கே கணக்கிட்டு, அவற்றின் அடிப்படையில் இங்கு தினந்தோறும் கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது தொடர்பான சில விவரங்களை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 56—ன்கீழ், 48 ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகளும், பேரவை விதி 55—ன்கீழ் பல்வேறு பொருள்களை உள்ளடக்கிய சுமார் 300—க்கும் அதிகமான கவன ஈர்ப்பு அறிவிப்புகளும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட சில ஒத்திவைப்புத் தீர்மான*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 28

அறிவிப்புகள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, விதிகளுக்குட்பட்டு கவன ஈர்ப்புகளாக அனுமதிக்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு விவர அறிக்கை கோரி அனுப்பப்பட்டன. இவ்வறிவிப்புகளில் உறுப்பினர்கள் அளித்த பொதுப் பிரச்சினை மற்றும் முக்கியமான பிரச்சினை குறித்த அறிவிப்புகள் 27–8–2015 அன்று முதல் 2 நாட்கள் தவிர்த்து, ஏனைய அனைத்து நாட்களிலும், நாள் ஒன்றுக்கு ஒரு கவன ஈர்ப்பு வீதம் 28–9–2015 வரை மொத்தம் 14 கவன ஈர்ப்புகள் பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி உறுப்பினர்களால் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட, 14 கவன ஈர்ப்புகளில், 9 எதிர்க் கட்சிகளைச் சார்ந்த மொத்தம் 21 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மொத்தம் 31 முறை வாய்ப்பளிக்கப்பட்டு, தங்களது கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அதன் விவரம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சிக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகள் 8, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு 8, தி.மு.க. விற்கு 5, இந்திய தேசிய காங்கிரஸ்–க்கு 3, மனிதநேய மக்கள் கட்சிக்கு 3, தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு 1, பாட்டாளி மக்கள் கட்சிக்கு 1, புதிய தமிழகம் கட்சிக்கு 1, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சிக்கு 1. விவர அறிக்கை பெறப்பட்டு, பேரவையில் எடுத்துக் கொள்ளப்படாத கவன ஈர்ப்புகளின் விவர அறிக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) குளச்சல் தொகுதி, ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தப்படுத்துதல்–தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள்கூட இன்று காலை 9–58 மணிக்குத்தான் இந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்தார்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இன்று காலை 9–58 மணிக்குத்தான் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்தார்.